DINAKARAN

4 AUG 2021

PAGE VI

# புதுவை பல்கலையில் ₹2.87 கோடியில் அறிவியல் தொழில்நுட்ப கருவி

## துணைவேந்தர் இயக்கி வைத்தார்

புதுச்சேரி, ஆக. 4: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் மத்திய கருவிமயமாக்கல் மையம் செயல்பட்டு வருகின்றது. இந்த மையத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற நவீன தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தி முனைவர் பட்ட மாணவர்கள் பல்வேறு நவீன ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பேராசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் ஆராய்ச்சிகளை மேலும் ஊக்கப்படுத்துகின்ற வகையில் புதுவை பல்கலைக்கழகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக மத்திய அரசு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை, பல்கலைக்கழக அறிவியல், ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மேம்பாட்டு திட்ட நிதி உதவியோடு ரூ.2.87 கோடி மதிப்பிலான நவீன ஊடு கதிர் மின் அணு நிறமாலை அளவீட்டு தொழில்நுட்பக் கருவி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இக்கருவியை ஆராய்ச்சி மாணவர்களுக்கு அர்ப்பணிக்கும் விழா மத்திய கருவி மயமாக்கல் மைய ஆராய்ச்சி கூடத்தில் நடந்தது.



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் மத்திய கருவி மயமாக்கல் மையத்தில் புதிய அறிவியல் தொழில்நுட்ப கருவியை மாணவர்களின் பயன்பாட்டுக்கு துணைவேந்தர் குர்மீத் சிங் அர்ப்பணித்தார்.

மைய தலைவர் பால. மணிமாறன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் ரவி காந்த் குமார், பேராசிரியர் சுரேஷ் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக துணைவேந்தர் குர்மீத் சிங் கலந்துகொண்டு புதிய கருவியை ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார். பின்னர் அவர் பேசியதாவது:

வேதியியல் பகுப்பாய்வு துறையில் பெரும் பயனை தரக்கூடிய புதிய நவீன தொழில்நுட்ப கருவியை பயன்படுத்தி மாணவர்களும், பேராசிரியர்களும் உலக தரத்திலான ஆராய்ச்சிகளில் ஈடுபட ஆர்வம் காட்ட வேண்டும். இந்த கருவியை பயன்படுத்தி தனிமங்களின் காற்று நிலைகளில் ஏற்படும் மாற்றங்களை எளிதல் கண்டறிய முடியும். அதனால் வேதியியல், இயற்பியல், பொறியியல் மற்றும் உயிரியல் துறை ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

DINAKARAN

4 AUG 2021

PAGE II



தினகரன்

## இதழியல், ஊடக சட்டம்

# புதுவை பல்கலை.யில் 2 புதிய பாடப்பிரிவுகள்

### துணைவேந்தர் தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, ஆக. 4: புதுவை பல்கலைக்கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

புதுவை பல்கலைக்கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையம் சார்பில் இந்த கல்வியாண்டு முதல் இணைய வழியிலான இலவச 2 புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. இதனை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் சார்பில் நடத்தப்பட உள்ள இலவச வகுப்புகளான புகைப்பட இதழியல் மற்றும் ஊடக சட்டம் ஆகிய 2 புதிய பாடப்பிரிவுகளில் புகைப்பட துறை மற்றும் இதழியல் துறைகளில் ஆர்வம் உள்ளவர்கள் சேர்ந்து பயன் பெறலாம். வயது வரம்பு எதுவமில்லை. மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தனித்திறன்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள 15 வார கால புதிய படிப்பில் புகைப்பட இதழ்கள், ஊடகச் சட்டம் மற்றும் ஊடக அறநெறிகள் முதலான பல்வேறு தலைப்புகளில் பேராசிரியர்கள் ராதிகா கண்ணா மற்றும் அருள் செல்வன் ஆகியோர் வழிகாட்டுதலில் வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

சுற்றுலா துறையில் ஆர்வம் உள்ளவர்கள் மற்றும் பறவைகள், விலங்குகள் வாழும் அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்கு சென்று இயற்கை அழகை படமெடுக்க விரும்புவர்களுக்கு தேவையான அனைத்து திறன்களையும் தொழில் நுட்பம் சார்ந்து மேம்படுத்துகின்ற வகையில் புகைப்பட இதழியல் துறை படிப்பு பல்கலைக்கழக பேராசிரியர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய கலை, கலாச்சாரம் மற்றும் சமூக மாற்றத்திற்கான ஆவணப் படங்களை எடுக்க விரும்புவர்களுக்கும் சிறப்பு பயிற்சிகளும் அளிக்கப்படவுள்ளன.

இந்திய அரசியலமைப்பு மற்றும் ஊடகம் தொடர்பான சட்டங்கள், அறநெறிகள் மற்றும் தொடர்புத்திறன் போன்ற பல்வேறு பயனுள்ள பாடத்திட்டங்களும் ஊடகச் சட்டம் பாடப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பாடப் பிரிவுகளில் சேர்ந்து பயில 1600க்கும் மேற்பட்டவர்கள் தங்கள் விருப்பங்களை தெரிவித்துள்ளனர். இம்மாதம் 31ம் தேதி வரை மாணவர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். இது தொடர்பான மேலும் விவரங்களை பெற விரும்புவர்கள் பல்கலைக்கழக கல்வி பல்லூடக ஆராய்ச்சி மையத்தை (இஎம்ஆர்சி) தோடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.